Tc - 36

# 012/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும். (4 × 25 = 100)

1. Translate the following into English : (25)

கருப்பு காந்தி, படிக்காத மேதை, மக்களின் நாயகன், கல்விக் கண் திறந்த காமராசர் விருதை விருதுநகர் மாவட்டத்தில் எளிய குடும்பத்தில் பிறந்தவர் 1940ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 14 ஆண்டுகள் அந்தப் பொறுப்பை வகித்தார். 1952ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார் மிகவும் தயக்கத்தோடுதான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இந்தியாவில் ஆங்கிலம் தெரியாத ஒருவர் முதலமைச்சர் ஆனது அதுவே முதன் முறை ஆங்கிலம் தெரியாமலும் ஆறு ஆண்டுகளே கற்ற கல்வியுடனும் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற அவர் தான் அடுத்த 9 ஆண்டுகளுக்கு தலைசிறந்த தலைமைத்துவத்தை தமிழகத்திற்கு வழங்கினார். அந்தக் காலகட்டத்தில் தான் இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட மாநிலம் என்ற பெருமையைப் பெற்றது பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதற்காக பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினார் ஏழை மாணவர்கள் பயனுற மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அணைகள் பல கட்டி விவசாயம் செழிக்க வழிவகை செய்தார். பிரதமர் பதவி ஏற்கும் தகுதி இருந்தும் பொறுப்பேற்காமல், பல பிரதமர்களை உருவாக்கினார். ஆடம்பர வாழ்க்கையை விடுத்து எளிய வாழ்க்கை வாழ்ந்தார் 'கிங் மேக்கர்' எனப் பெருமிதத்துடன் அழைக்கப்பட்டார். தாம் முதலமைச்சராக இருந்த போதும் வறுமையில் வாடிய தம் தாய்க்குச் சிறப்புச் சலுகைகள் செய்யாதவர். இவ்வளவு சிறப்புப் பெற்றவர் காமராசர். அவரில்லையேல் தமிழ் நாட்டில் இவ்வளவு வளர்ச்சியும், நாட்டிற்கு இந்திரா காந்தி போன்ற ஆட்சியாளரும் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. அனைத்து அரசியல்வாதிகளும் மெச்சத்தக்க பொற்கால ஆட்சியை தமிழகத்திற்குச் தந்தவர்.

நாம் காமராசர் மண்ணில் பிறந்து இருக்கிறோம், அதில் பெருமிதம் கொள்வோம். மேலும் காமராசரின் வாழ்வை முன்னுதாரணமாகக் கொண்டு நமது சமூகம் தேசம் தழைக்கப் பங்காற்றுவோம்.

தனது கடைசி மூச்சுவரை சமூகத் தொண்டு செய்வதிலேயே குறியாக இருந்தவர். 1975ம் ஆண்டு ஆக்டோபர் 2ம் நாள் தனது 72வது அகவையில் காலமானார். அன்னார் வழி நிற்போம்!.

[Turn over

2. Translate the following into English : (25)

பெமினிசம் என்னும் ஆங்கிலச் சொல் ஃபெமினா எனும் இலத்தீன் மொழி சொல்லிலிருந்து உருவானது இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். ஃபெமினிசம் என்பதற்குப் 'பெண்ணியம்' என்பதே பொருத்தமான கலைச் சொல்லாகும். பெண்ணியம் என்பது பெண்களைத் தாழ்வு படுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கோட்பாடுகளின் தொகுப்பாகும். ஆண், பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு. பெண்ணியமானது பல்வேறு குறிக்கோள்களை உள்ளடக்கியது. அவற்றில் சில

- ஆண், பெண் இருபாலருக்கும் சமத்துவ உரிமைகளை ஒன்றிணைத்து நிலைநாட்டுதல்
- பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஒருங்கிணைத்து, இயக்கமாக்கி, அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடச் செய்தல்
- பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டுதல்
- ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதனை அறவே களைதல்

தொடக்க காலத்தில் மனிதகுலம் தாய்வழிச் சமூகமாக இருந்துள்ளது. பின்னர் பல்வேறு சமூக மாற்றத்தால் தாய்வழிச் சமூகம் வீழ்ச்சி கண்டது. நாடெங்கிலும் பெண் பல்வேறு கொடுமைகளுக்கு ஆட்பட்டாள். இவ்வகையான பெண்ணின் கொடுமைகளுக்கு எதிராக பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உலகெங்கிலும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. பெண்களுக்குச் சுதந்திரம் சம உரிமை, விதவை மறுமணம், உடன் கட்டை எதிர்ப்பு பெண் கல்வி முதலானவற்றில் பெண்ணியம் விழிப்புணர்வு பெற்றது. மேற்கத்திய நாடுகளில், பெண்களுக்கு ஓட்டுரிமை, தேர்தலில் போட்டியிடும் அனுமதி, குழந்தை பெற்றுக் கொள்வதில் தன்னுரிமை, சொத்துரிமை, சம்பளத்தில் பாலியல் பாகுபாடின்மை போன்றவற்றைப் பெறமுடிந்தது. இந்தியச் சூழலில் ஓட்டுரிமையும் தேர்தலில் போட்டியிடும் உரிமையும், பெண்ணியம் பார்வை கொண்ட நேரு, அம்பேத்கார் போன்றோர் இருந்ததால், பெண்களுக்கு எளிதாகக் கிடைக்கப் பெற்றன.

பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், ஊக்கத்தையும் அளித்து வளர்க்க வேண்டும் என்பது அவசியம், ஆனால் ஆண் பெண் இருபாலின குழந்தைகளையும் பெண்ணியவாதிகளாக வளர்ப்பது அவசியம் எனக் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சமீபத்தில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

3. Translate the following into English : (25)

இந்தியாவில் பல ஆறுகள் வற்றாத ஜீவநதிகள் சில ஆறுகளில் மழைக்காலத்தில் மட்டும் நீர்ப் பெருக்கெடுத்து ஓடும் நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்பது பல தேசப் பாதுகாவலர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் இதுவரை அந்த எண்ணம் நிறைவேற்றப்படவில்லை. வங்கிகள் தேசியமயமாக்கப்படுகின்றன. ஆனால் ஆறுகள் தேசியமயமாக்கப் படுவதில்லை. தற்போதைய மத்திய அரசு அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும் மற்றும் இந்தியாவை தன்னிறைவான மற்றும் தன்னியக்க நிலைக்கு மாற்றும் ஒரு பொன்னான வாய்ப்பைக் கொண்டுள்ளது. மேலும் அந்தச் செயல்பாட்டில் குறைந்த கார்பன் உமிழ்வுகள் மற்றும் பாதுகாப்பின் மூலம் உலகளாவிய நலத்தை மேம்படுத்த உதவுகிறது.

தேசியமயமாக்கல் திட்டம் அனைத்துப் பிரிவுகளுக்கும் பயனளிக்கும்

- நீர் பற்றாக்குறை, வெள்ளம் மற்றும் தேவையற்ற நிதிப்பிரச்சனைகள் அரசியல் சார்பு மற்றும் இனவாத தாக்குதலுக்கு வழிவகுக்கும்,
- உயர் விவசாய உற்பத்தி வலுவான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும்
- நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதன் மூலம் மின்சார உற்பத்தி அதிகரிக்கலாம்
- தொழில் துறை வளரும் பொருளாதார வளர்ச்சி பெருகும்

இந்திய தொழிலக கூட்டமைப்பு சார்பில் நடந்த வேளாண் கருத்தரங்கத்துக்கு சென்னையில் தொடங்கி வைத்து மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் உரையாற்றினார். அவர் பேசுகையில் இந்தியாவில் தற்போதைய உணவு உற்பத்தி 235 மில்லியன் டன் என்ற அளவில் உள்ளது. இது 170 மில்லியன் ஹெக்டேரில் நடைபெறுகிறது. அடுத்த ஒன்பது ஆண்டுகளில் நமது உணவுத் தேவை 400 மில்லியன் டன் என்ற அளவில் இருக்கும் குறைந்த தண்ணீரை வைத்து, குறைந்த நிலப் பரப்பில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதற்கு நீர் நிர்வாகம் மிகவும் அவசியம். 1500 டி.எம்.சி. தண்ணீர் கடலில் கலக்கிறது 300 டி.எம்.சி தண்ணீரை சேமித்தாலே நமது தேவை நிறைவேறிவிடும் நாடும் வளமாகும். இதற்குப் பெரிய நதிகளையும் பெரிய நீர் நிலைகளையும் தேசியமயமாக்க வேண்டும் இந்தியாவில் தேசிய நெடுஞ்சாலைகள் கொண்டு வந்தது போல் எரிசக்திக்கு கிரிட் கொண்டுவந்தது போல் அனைத்து நதிகளையும் தேசியமயமாக்க வேண்டும். நதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ராணுவம், கடற்படை போன்ற பாதுகாப்பு அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும். அமெரிக்காவிலும் நதிநீர் தாவா இருந்தது. அதைத் தீர்க்க தேசிய அளவில் புதிய கொள்கையை அறிவித்து செயல்படுத்தியும் காட்டினர் மிசிசிபி ஆற்று நீரை தற்போது 31 மாநிலங்கள் பயன்படுத்தி வருகின்றன. அது போல் இந்தியாவிலும் தேசிய அளவில் ஒரு கொள்கை வகுத்து அனைத்து நதிகளும் தேசிய மயமாக்க வேண்டும் என்றார் கலாம்.

4. Translate the following into English : (25)

உணவுத் தொழில், வேளாண்மை அல்லது விவசாயம் என்பது உணவுக்காகவும், ஏனைய பயன்பாடுகளுக்காகவும் சிலவகைப் பயிர்களை உற்பத்தி செய்வதைக் குறிக்கும் வேளாண்மை ஒரு முக்கியமான முதனிலைத் தொழில் தாவரங்களின் உற்பத்தியைக் கொண்டு நாகரிகத்திற்கு வழிவகுத்திட்ட சிறப்பான மானிடவியல் வளர்ச்சி வேளாண்மை ஆகும்.

மனிதச் சமூகம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வேளாண்மை செய்து வந்துள்ளது. வேளாண் வளர்ச்சியும் முன்னேற்றமும் வெவ்வேறு தட்பவெப்பநிலைகள், பண்பாடுகள் தொழில் நுட்பங்கள் போன்றவற்றைச் சார்ந்து மாறுபட்டு உள்ளது. தாவரங்களையும் விலங்குகளையும் பழக்கப்படுத்திப் பயன்பாட்டுக்குக் கொண்டு வர நிலத்தைப் பண்படுத்துவதற்கெனப் பலநிலையிலும் தொழில் நுட்பங்களையே வேளாண்மை நம்பி உள்ளது. தாவரங்களைப் பயிர் செய்ய நீர்ப்பாசனம் தேவை தரிசுப் பயிர் முறையும் உள்ளது.

1940களில் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் செய்கை நுட்பங்கள் வேளாண் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கின இந்த வேளாண் தொழில் நுட்பமும் அதனால் நிகழ்ந்த சமூகப் பொருளாதார மாற்றங்களும் பசுமை புரட்சி எனப்படுகிறது. இந்தியா போன்ற மூன்றாம் நிலை நாடுகள் பட்டினிச் சாலை எதிர் நோக்கிய அன்றைய காலக்கட்டத்தில் பசுமைப் புரட்சி முன்னிறுத்திய பயிர்ச் செய்கை முறைகள் பலன் தந்தது. பசுமைப்புரட்சி உலக சமூக தொழில்நுட்ப பொருளாதார அரசியல் தளங்களில் நிகழ்ந்த முக்கியப் புரட்சியாகக் கருதப்படுகிறது.

காலநிலை, நிலத்தோற்றம், மண்வளம், நீர்வளம் மற்றும் பணியாளர்கள் ஆகிய காரணிகள் வேளாண் தொழில்களில் வேறுபாடுகளையும், பரவலையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன.

மனிதனால் பலவிதமான வேளாண் பயிர்கள் பயிரிடப் படுகின்றன. சில உணவுக்காகவும், சில இழைகளுக்காகவும் பயிரிடப் படுகின்றன விவசாய உற்பத்திப் பொருட்கள் பொதுவாக (1) உணவுகள் (2) இழைமங்கள் (3) எரி பொருட்கள் (4) மூலப்பொருட்கள் (5) மருந்துப் பொருட்கள் (6) ஊக்க மருந்துகள் மற்றும் ஒப்பனை வகைப் பொருட்கள் எனப் பலவாறு வகைப்படுத்தலாம்.

20ம் நூற்றாண்டில் வேளாண்மைத் தொழில் மிக்க வளர்ச்சியடைந்தது. செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. உணவு உற்பத்தி பன்மடங்கு பெருகியது. மேலும் தெரிவு வளர்ப்பு முறை இயந்திர முறை வேளாண்மை பெருகியது. அதோடு விவசாய மானியங்கள் வழங்கப்பட்டன. ஆனால் பூச்சிக் கொல்லிகளையும் செயற்கை உரங்களையும் அதிகப்படியாகப் பயன்படுத்துவது நிலத்தின் நீண்ட காலச் செழுமையைப் பாதிப்பதோடு மனிதனின் நலத்தையும் பாதிக்கும் என்பதால், 'உயிரி வேளாண்மை' போன்ற இயற்கை இசைவு முறை வேளாண்மையில் மேன்மையும் வலியுறுத்தப்பட்டது.

---